# வரலாற்றில் மாமண்டூர்



வெளியீடு

திருவண்ணாமலை
மாவட்ட வரலாற்று
ஆய்வு நடுவம்

www.tiruvannamalaiheritage.org

# அறிமுகம்

தமிழகக் கலை வரலாற்றில் வசந்தம் வீசத்தொடங்கியது பல்லவர்கள் ஆட்சிக்காலத்தில் என்றால் மிகையாகாது. இசை, இலக்கியம், நாடகம், சிற்பவியல், கல்வெட்டியல் என தமிழக வரலாற்றிற்கு சிறப்பான சான்று களைக் கொடுத்தவர்கள் பல்லவர்கள் ஆவர். இன்று உலகமே போற்று கின்ற தென்னிந்திய அல்லது திராவிடக் கட்டடக்கலைக்குச் சான்றாகத் திகழும் கோயில்களுக்கெல்லாம் முன்னோடியாக ஊற்றுக்கண்ணாக விளங்குபவை பல்ல வர்கள் அமைத்த குடைவரைக் கோயில்களாகும். ஆரம்பத்தில் மிகச் சாதாரணமாக அமைத்த குடைவரைக் கோயில்களை பிற்காலத்தில் வந்த மன்னர்கள் விரிவுபடுத் தியும் அழகுபடுத்தியும் புதுமைப்படுத்தியும் மேம்படுத்தினர்.

வடதமிழ்நாட்டில் முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் (பொ.ஆ. 590 முதல் 630 வரை) எழுப்பிய குடைவரைகளே முதன்மையானவையாகும். இதில் மண்டகப்பட்டு குடைவரை முதலாவது என்றும் பிற குடைவரைகள் அதற்கு சற்று பிந்தைய காலத் தைச் சேர்ந்தவை என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மகேந்திரவர்மன் தான் உருவாக்கிய குடைவரைகள் ஒவ்வொன்றிலும் ஒரு புதுமையைப் புகுத்தியுள்ளான். அவை தூண் வடிவங்களாகவோ, உத்திரங்களாகவோ, கல்வெட்டுகளாகவோ அமைந்து வளர்ச்சி நிலையைக் காட்டுகின்றன.

பொதுவாக குடைவரைகள் சிறு குன்றுகளிலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவை குன்றின் சாய்வில் பொதுவாக கிழக்குப் பக்கம் நோக்கியும், மூன்று வாயில்கள் வைத்தும் துவாரபாலகர்களுடன் சிவன், விஷ்ணு மற்றும் பிரம்மனுக்கு என தனித் தனி சந்நிதிகள் அமைத்தோ அல்லது சிவனுக்கு மட்டும் ஒரே சந்நிதி அமைத்தோ கட்டப்பெற்றிருக்கும். இக்குன்றுப் பாறைகள் மிகவும் கடினமாக இருப்பதால் இதில் குடைவரைகள் அமைப்பதும் கடினமானதாகும். ஆனாலும் வடதமிழ்நாட்டில் பல்ல வர்கள் 15–க்கும் மேற்பட்ட குடைவரைகள் அமைத்து சாதனை புரிந்தனர். குடை வரைகளில் மேம்பட்ட நிலையாக மாமல்லபுரம் மற்றும் திருச்சி குடைவரைகளைக் கருதலாம். திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள மாமண்டூர் குடைவரை களில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கல்வெட்டுகள் மூலமாகவும் உருவாக்கிய ஏரி மற்றும் கோயில்கள் மூலமாகவும் வருங்காலச் சந்ததியினருக்கு சில வரலாற்றுச் செய்திகளை அவர்கள் அளித்துள்ளனர். அதை அறிய நேரில் சென்று பார்க்க வேண்டும். இக்குடைவரைகளைப் பாதுகாக்க வேண்டும். அதற்கு இந்தக் கையேடு ஏதேனும் ஒரு வகையில் உதவும் என்றால் அதுவே மகிழ்ச்சியாகும்.


நூல் ஆக்கம் / தொகுப்பு

**ச. பாலமுருகன்**

செயலாளர்

**திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம்**

**Tiruvannamalai District Centre for Historical Research**

தொடர்பிற்கு : 90475 78421 // 94886 57729

e-mail : tvmchr@gmail.com facebook.com/tvmalaichr

www.tiruvannamalaiheritage.org



பதிவு எண் :163 / 2017

# வரலாற்றில் மாமண்டூர்

## தூசி – மாமண்டூர் – நரசமங்கலம்

### 1. அமைவிடம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் வெம்பாக்கம் வட்டத்தில் அமைந்துள்ளது மாமண்டூர் கிராமம் இது வந்தவாசி – காஞ்சிபுரம் மாநில நெடுஞ்சாலையில் (SH - 114) காஞ்சிபுரத்தில் இருந்து 10ஆவது கிலோ மீட்டரில் சாலைக்கு மேற்கே 2 கி.மீ. தொலைவில் சிறு குன்றுகளை ஒட்டி அமைந்துள்ளது. மாமண்டூர் குடைவரைகள் என்பன நரசமங்கலம் எல்லையில் 2 குடைவரைகளும் மாமண்டூர் எல்லையில் இரண்டு குடைவரைகளும் சேர்ந்தவை.

### 2. மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி)

| வ.எ. | கிராமம் | மொத்த வீடுகள் | பரப்பு (ஹெக்.) | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | நரசமங்கலம் | 392 | 178.63 | 856 | 847 | 1703 |
| 2. | மாமண்டூர் | 1024 | 620.48 | 2155 | 2132 | 4287 |
| 3. | தூசி | 1384 | 615.00 | 2811 | 2766 | 5577 |



## 3. பெயர்க் காரணம்

குடைவரைகள் அமைந்துள்ள நரசமங்கலம் என்ற ஊர் கல்வெட்டுகளில் நரசிங்க மங்கலம் என்றும் மாமண்டூர் என்ற ஊரின் பெயர் கல்வெட்டுகளில் மாவண்டூர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. நரசிங்க மங்கலம் என்பது நரசமங்கலமாக மருவியுள்ளது. நரசிங்க என்ற பெயர் பல்லவ மன்னன் நரசிம்மவர்மனைக் குறிக்கலாம். இவ்வூரின் அருகில் உள்ள பல்லவபுரம் என்ற ஊரின் பெயரும் பல்லவர்கள் இப்பகுதியை ஆட்சி புரிந்ததைக் குறிப்பிடு கிறது.

## 4. தொழில் / விவசாயம்

இக்கிராம மக்களின் முக்கியத் தொழில் விவசாயம், இங்குள்ள மாமண்டூர் ஏரி நீர்பாசனத்திற்கு முக்கிய ஆதாரமாக இருப்பதால் இப்பகுதியில் விவசாயம் முக்கியத் தொழிலாக உள்ளது. மேலும், இவ்வூர் காஞ்சிபுரம், சென்னைப் புறநகர் பகுதியில் உள்ளதால் இவ்வூரார் சென்னைக்கு அருகில் உள்ள தனியார் நிறுவனங்களிலும் செய்யார் சிப்காட் வளாகத்தில் அமைந்துள்ள தனியார் நிறுவனங்களிலும் வேலைவாய்ப்பு பெறுகின்றனர்.

## 5. ஊராட்சி அமைப்புகள் / பள்ளிகள்

வெம்பாக்கம் ஒன்றியத்துக்கு உட்பட்ட தூசி, மாமண்டூர், நரசமங்கலம் ஆகியவை தனித்தனி பஞ்சாயத்துக்களாகவும், தனித்தனி வருவாய் கிராமங்களாகவும் உள்ளன. இவற்றில் மாமண்டூரில் ஒரு உயர்நிலைப்பள்ளி மற்றும் தொடக்கப்பள்ளியும், தூசி மற்றும் நரசமங்கலத்தில் தலா ஒரு தொடக்கப்பள்ளியும் இயங்கி வருகின்றன.

## 6. கோயில்கள்

மாமண்டூர் கிராமத்தில் திரிபுரசுந்தரி சமேத நந்தீஸ்வரர் கோயில், நாராயணசாமி பெருமாள் கோயில், திருமனந்தீஸ்வரர் கோயில், தீப்பாஞ்சாள் கோயில், திரௌபதி கோயில், மாரியம்மன் கோயில் ஆகியன உள்ளன.

நரசமங்கலம் கிராமத்தில் ஜலகண்டேஸ்வரர் கோயில், மாரியம்மன் கோயில், தூசியில் வைகுந்த பெருமாள் கோயில், இவை தவிர பிள்ளையார் கோயில் உள்ளிட்ட பல புதிய கோயில்கள் உள்ளன.

## 7. திருவிழாக்கள்

மாமண்டூரில் சித்திரைத் திருவிழாவும் ஆடிமாதத் திருவிழாவும் நடைபெறுகிறது. திரிபுரசுந்தரி சமேத நந்தீஸ்வரர் கோயில் மற்றும் நாராயணசாமி பெருமாள் கோயில் களிலிருந்து விளக்கேற்றி மாமண்டூர் ஏரியில் விடும் விழாவும் நடைபெறுகிறது.




## 8. வரலாறு


திருவண்ணாமலை மாவட்டம் பண்டைய காலத்தில் தொண்டைமண்டலத்தின் ஒரு பகுதியாக இருந்தது. இப்பகுதியில் அதிக அளவிலான வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த பல தொல்லியல் நினைவுச் சின்னங்கள் கிடைத்துள்ளன. செய்யார் வட்டத்தில் மகாஜனப்பாக்கம், நெடுங்கல், எச்சூர் போன்ற இடங்களில் பெருங்கற்கால நினைவிடங்கள் உள்ளன. அதைப்போல மாமண்டூர் ஏரியின் எதிரில் சில பெருங்கற்கால நினைவிடங்கள் உள்ளன. இவற்றில் பல தற்போது அழிந்துவிட்டன. இந் நினைவுச் சின்னங்களைப் பற்றி The Antiquities of Mamandur என்ற ஆங்கிலேயர் காலக் குறிப்பு தெரிவிக்கிறது. அதன்படி பெருங்கற்கால நினைவுச் சின்னமான கல்பதுக்கைகள் நான்கு புறமும் கற்களால் மூடியும் மேலே ஒரு பெரிய பாறை வைக்கப் பட்டும் கிழக்குப் பக்கக் கல்லில் ஒரு துளை வைக்கப் பட்டும் இருந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது அப்பகுதி முழுவதும் விவசாயப் பயன்பாட்டிற்காக நிலங்களைச் சரிசெய்ததால் அச்சின்னங்கள் காணப்படவில்லை. ஓரிரு கல் வட்டங்களின் எச்சங்களைக் காணமுடிகிறது.

இவ்விடம் சங்ககாலத்திலும் முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பது அக்காலத்தில் வெட்டப்பட்ட தமிழிக் கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது. மேலும் இக்கல்வெட்டு உள்ள குன்றில் சமண முனிவர்கள் வாழ்ந்து வந்ததற்கான அடையாளமாக கற்படுக்கைகளும் காணப்படுகின்றன. இக்கற்படுக்கையின் மேல் உள்ள பாறையின் முகப்பில் தமிழிக் கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டில் தேனூரைக் கைப்பற்றிய தலைவனான கோன் கணிமான் என்பவனுடைய குன்று என்றும் இதில் பந்தல் தாங்கும் வசதியை (ஆசி) செய்பவன் செய்தளித்தான் என்றும் வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். தமிழிக் கல்வெட்டுகளில் சிற்றரசர்களின் பெயரைக் குறிக்கும் கல்வெட்டுகளில் இது சிறப்பு வாய்ந்ததாகும். இதில் தச்சன் பெயர் வருவதும் குறிப்பிடத் தக்கதாகும்.

முதல் குடைவரையில் உள்ள மகேந்திரவர்மனின் கல்வெட்டு, அவன் ஆடல் பாடல்களை யுடைய கந்தர்வ சாஸ்திரத்தில் தேர்ந்தவனாக







2000 ஆண்டுகள் பழைய தமிழி கல்வெட்டு - மாமண்டூர் குடைவரை



இருந்தான் என்பதும் 'மத்தவிலாஸம்' மற்றும் 'பகவதஜ்ஜுகம்' முதலிய நகைச்சுவை நாடகங்கள் உள்ளிட்ட பல நாடகங்களை இயற்றியவன் என்பதும், இவனுடைய நாடகம் வால்மீகி வர்ணித்தபடி பரதனை நாயகனாகக் கொண்டது மற்றொன்று அவையில் பாஞ்சாலியின் ஆடை களைவதைக் கருவாகக் கொண்டது ஆகும். இவன் இசைக் கருவிகளிலும் தேர்ச்சி பெற்றவன். இவனது பட்டப் பெயர்களாக 'நித்யவிநீதம்', 'ஸத்யஸந்தன்' மற்றும் 'சத்ருமல்லன்' ஆகிய விருதுப்பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளது. மேலும் இக்குடைவரையில் தெற்குக் கீழ்ப் பகுதியில் இசையைக் குறிக்கும் ஒரு வரி கிரந்த கல்வெட்டும் (பா–ஸ–ஸ–ஸ–த–ஸ) பொறிக்கப்பட்டுள்ளது.

இக்குடைவரையின் மேல் உள்ள கற்றளியில் உள்ள கல்வெட்டுகளும் இரண்டாம் குடைவரையில் உள்ள கல்வெட்டுகளும் அவ்வூரில் பல்வேறு இனத்தவர்கள் சேர்ந்து வாழ்ந்ததைத் தெரிவிக்கின்றன. இராஜராஜன் கல்வெட்டில் காலியூர் கோட்டத்துச் சித்திர மேகத் தடாகத்தின் கீழ் உள்ள உத்திரவாலீஸ்வரமுடைய தேவர்க்கு தியங்குடையான் நம்பணி ராமன் என்பவர் அரை விளக்கிற்கு வைக்க 46 ஆடுகள் வழங்கியது பற்றியும் மற்றொரு சோழர் காலக் கல்வெட்டில் திருவண்ணாமலை வியாபாரி ஆடுகள் தானம் செய்தது பற்றியும் குறிப்பிடப்படுகிறது. இவ்விரண்டு கல்வெட்டுகளிலும் சித்திரமேகத் தடாகத்தின் கீழ் உள்ள உத்திரவாலீஸ்வரமுடைய கோயில் என்று குறிப்பிடுவது சிறப்புக் குரியதாகும். பல்லவர் காலத்தில் இயற்கையாக அமைந்த மலைத் தொடரின் பின்னே ஏரியாக அமைத்ததை சோழர்கள் காலத்தில் 'சித்திரமேகத் தடாகம்' என்று குறிப்பிடுகிறது. இதில் 'சித்திர' என்பது மகேந்திரவர்மனின் பட்டப் பெயர்களில் ஒன்றான 'சித்ரகாரப்புலி' என்பதிலிருந்து வந்திருக்கலாம், மகேந்திரவர்மனின் மகேந்திரவாடியில் உள்ள ஏரி 'மகேந்திரத் தடாகம்' என்றும் பல்லவர் கால உத்திரமேரூர் ஏரியின் பெயர் 'வைரமேகத் தடாகம்' என்றும் குறிப்பிடப்படுவதை இங்கு ஒப்பு நோக்கலாம்.

சுந்தர பாண்டியன் காலக் கல்வெட்டில் அவ்வூரில் திருத்தவக் குன்றமுடைய நாயனார், கெத்தாவாலப் பிள்ளையார், தென் திருவேங்கடம் கோயில்களும் பிடாரி மற்றும் துர்க்கை கோயில்கள் இருந்ததும் தெரியவருகிறது. மேலும் இவரது கல்வெட்டில் இறுதியாக இடம் பெறும் கையெழுத்திடும் பகுதியில் 25–க்கும் மேற்பட்ட நபர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பாக தமிழதரையன், கணக்கந்தை போன்ற பெயர்கள் குறிப்பிடத்தக்கன.

மாமண்டூரில் உள்ள மற்றொரு கோவிலான திருமனந்தீசுவர் கோயிலில் உள்ள சம்புவராயர் கல்வெட்டில் பிணம் செல்லும் வழிக்கு என்ற வாசகம் வருகிறது. இதில் இவ் வூரில் ஒரு சுடுகாட்டுப் பாதை இருந்ததை அறிய முடிகிறது.

இவ்வூரின் ஏரியை தூசி மாமண்டூர் ஏரி என்று அழைக்கப்படுகிறது. கல்வெட்டிலேயே அவ்வாறு குறிப்பிடப்படுகிறது. இவ்வேரி தூசி கிராம எல்லைக்கும் மாமண்டூர் கிராம எல்லைக்கும் இடையில் நீண்ட தூரம் கரையைக் கொண்ட ஏரி என்பதை அறியலாம். இவ்வேரிக்கு கரையைப் பலப்படுத்தி பாலாற்றில் இருந்து தண்ணீர் வருவதற்கு, சக வருஷம் 1560–ல் சென்னப்பநாயக்கர் மகன் வெங்கடப்ப நாயக்கர் தன் உபயமாக தூசி மாமண்டூரில் ஏரிகட்டிவிச்சி அதற்குச் சென்னசாகரம் என்று பெயர் சூட்டி பாலாற்றில் இருந்து நீர் கொண்டு வர கால்வாய் அமைத்த செய்தி தெலுங்கு, தமிழ், கிரந்தம் மற்றும் வடமொழி கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இக்கல்வெட்டு இவ்வேரியை தம்முடைய கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் புண்ணியம் அடையவேண்டும் என்றும் சகல சனங்களும் பயன்படவேண்டும் என்றும் கருதி வெட்டுவித்ததாக குறிப்பிடுகிறது. இவற்றை நோக்கும்

போது இவ்வேரி மக்களுக்கு பெரிதும் பயன்பட்டதாகவும் இதுபோல ஏரிகள் அமைப்பது அறச்செயல்கள் என்றும் கருதி செய்துள்ளார்கள்.

தூசியில் உள்ள வைகுந்த பெருமாள் கோயில் கல்வெட்டில் அவ்வூரில் கிராம சபை இருத்தது, நிலதானம் செய்த விவரம், நிலமளக்க 16 சான் கோல் பயன்படுத்திய விவரம் தெரிய வருகிறது.


மேலும் இவ்வூரில் அமைந்துள்ள குன்றில் நான்கு குடைவரைகள் அமைந்துள் ளன. இது தமிழகத்தின் மிகப்பெரிய குடைவரை என்ற சிறப்பும் பெற்றுள்ளது. இக்குடை வரைகளின் அமைப்பு, கல்வெட்டுகள், குடைவரையில் காணப்படும் வண்ணம் தீட்டப்பட்ட தன்மை ஆகியவை 7 ஆம் நூற்றாண்டு பல்லவர் காலக் கலைத்திறனைக் கண்முன் நிறுத்தும் சாட்சிகளாகும்.

தூசி கிராமத்தில் அமைந்துள்ள பழைய பதிவாளர் அலுவலகக் கட்டடம் 1914ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அக்கட்டடத்தில் தூசி காவல் நிலையம் உள்ளிட்ட பல அலுவலகங் கள் செயல்பட்டன. இக்கட்டடத்தில் மகாத்மா காந்தி அவர்கள் ஒருநாள் சிறைவைக்கப் பட்டதாக குறிப்பிடுகின்றனர் சிறையிலிடப்பட்ட தேதி மற்றும் காரணம் இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

இவ்வூரில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம், சங்ககாலம், பல்லவர்கள், சோழர்கள், சம்புவராயர்கள், பாண்டியர்கள், நாயக்கர்கள், பிற்கால ஆட்சியாளர்கள் என 2000 ஆண்டு களுக்கு தொடர்ச்சியாகக் கல்வெட்டுகளும் வரலாற்றுச் சின்னங்களும் காணப்படு கின்றன. திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழிக் கல்வெட்டு காணப்படும் இடம் இது வொன்றேயாகும். மேலும் வரலாற்றுச் சிறப்பு மிக்க மகேந்திர வர்மனின் பல்லவ கிரந்தக் கல்வெட்டு காணப்படுவதும் சிறப்புக்குரியதாகும்.

## 9. குடைவரைகள்

மாமண்டூர் ஏரியின் கரையாக அமைந்திருக்கும் குன்றுத்தொடர் நரசமங்கலம் மற்றும் மாமண்டூர் கிராம எல்லையில் சரிபாதியாக அமைந்துள்ளது. முதலிரண்டு குடைவரைகள் மாமண்டூர் கிராம எல்லையிலும் மூன்று மற்றும் நான்காவது குடைவரைகள் நரசமங்கலம் எல்லையிலும் அமைந்துள்ளன. தென்வடக்காக உயர்ந்து விரியும் இக்குன்றுத் தொடரின் பின்புறம் முதலாம் மகேந்திரவர்மனால் உருவாக்கப்பட்ட ‘சித்திரமேகத் தடாகம்’ அமைந்துள்ளது. கடினமான பாறையைக் குடைந்து குடைவரைகளை அமைக்கும் பணியை மகேந்திரவர்மனின் காலத்தில் தொடங்கியதாக வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். விழுப்புரம் மாவட்டம் மண்டகப்பட்டு குடைவரை வடதமிழ்நாட்டின் முதல் குடைவரை என்று கருதப்படுகிறது.





## குடைவரை எண் : 1

தெற்கு வடக்காக நீண்டிருக்கும் மலைக்குன்றின் வடகோடியில் அமைந்துள்ளது முதல் குடைவரை. இக்குடைவரையின் முகப்பு இரண்டு முழுத்தூண்களும் இரண்டு அரைத் தூண்களும் கொண்டு அமைந்துள்ளது. பக்கங்களில் அமையப் பெற்றுள்ள அரைத் தூண் கள் நான்முகத் தூண்களாகவும் இடையில் உள்ள தூண்கள் சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பிலும் உருவாக்கப்பட்டுள்ளன. கீழ்ச்சதுரம் மேற்சதுரத்தை விட இருமடங்கு பெரிய தாகக் காட்டப்பட்டுள்ளது. முழுத்தூண்களின் சதுரங்களில் மேற்கு முகத்தைத் தவிர மற்றவைகளில் தாமரைப்பதக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இப்பதக்கங்கள் மேல்புறத்தில் முக்கால் அளவிலும் கீழ்புறத்தில் முழுமையாகவும் அமைந்துள்ளன. தூண்களின் மேல் எளிமையான போதிகைகள் அமைந்துள்ளன. இவற்றை நோக்கும் போது இக்குடை வரைகள் பல்லவர்களின் ஆரம்ப காலப் பணிகளாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

### முகமண்டபம்

முகப்பிற்குப் பின் அமைந்துள்ள முகமண்டபம் சுமார் 6 மீட்டர் நீளமுடையது. இம் மண்டபத்தின் தெற்குச் சுவரில் மகேந்திரவர்மனின் பட்டப்பெயர்களைக் கொண்ட பல்லவ கிரந்தக் கல்வெட்டு காணப்படுகிறது.

### கருவறை

பின்சுவரின் மையப்பகுதியில் ஒரு கருவறை காணப்படுகிறது. கருவறையின் தாங்குதளம் பாதபந்த அமைப்புடன் கீழிருந்து மேலாக ஜகதி, எண்பட்டைக் குமுதம் கம்புகளோடு கூடிய கண்டம், பட்டிகை, மேற்கம்பு என்னும் உறுப்புகளை வரிசையாகக் கொண்டுள்ளது. கருவறையில் இறை உருவங்கள் ஏதும் இல்லை.

## குடைவரை எண் : 2


மாமண்டூர் நரசமங்கல குன்றுத் தொடரினைப் பிரிக்கும் ஓடையின் வடபுறத்தே யுள்ள பெரிய பாறையொன்றின் முகப்பில் கிழக்கு நோக்கியவாறு இக்குடைவரை அமைந் துள்ளது. கல்வெட்டுகள் இக்குடைவரையினை ருத்ர வாலீஸ்வரம் என்று குறிப்பிடுகின்றன.

### முகப்பு

குடைவரையின் முன்புறம் இரண்டு அடுக்கு நடைப்பகுதியாக அமைந்துள்ளது. இந்நடைப் பரப்பினை இருபுறங்களையும் அணைந்தவாறு முன்னிழுக்கப்பட்டு இறங்கும்










பாறைச்சரிவு இக்குடைவரையின் தெற்கு மற்றும் வடபுறச் சுவர்களாக அமைந்துள்ளது. முன் தரையின் நடைப்பரப்பிற்கு உட்புறம் குடை வரையின் முகப்பில் நான்கு தூண் கள் குடையப்பட்டுள்ளன. அவற்றுள் மையத்தூண்கள் இரண்டும் முழுத் தூண்களாகவும், வலது மற்றும் இடதுபுறத் தூண்கள் அரைத் தூண் களாகவும் அமைந்துள்ளன.

அரைத் தூண்கள் நான்கு பக்கங்களையும், முழுத் தூண்கள் சதுரம், கட்டு, சதுரம் அமைப்புக ளோடும் உள்ளன. தூண்களின் மேற் சதுரங்களிலிருந்து புறப்படும் போதி கைகளின் கீழ்க்கை விரிகோண வடிவில் மேற்சென்று உத்திரத்தை தாங்குகின்றன. உத்திரத்துடன் இணைந்தவாறு வாஜனம் குடை வரையின் முழு நீளத்திற்கும் செல் கிறது.









குடைவரையின் முகப்பில், உத்திரம் மற்றும் போதிகைகள் பச்சை, மஞ்சள், சிவப்பு வண்ணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தமைக்கான சுவடுகளைக் காண முடிகிறது.

### முகமண்டபம்

முகப்பினையடுத்து மண்டபத்தின் மையப்பகுதியிலுள்ள தூண் வரிசை மண்டபத்தினை இரண்டாகப் பிரிக்கிறது. முகப்பிலுள்ள தூண் வரிசைக்கும் மையப் பகுதியிலுள்ள தூண் வரிசைக்கும் இடைப்பட்ட பகுதியை முக மண்டபம் எனலாம். முக மண்டபத்தின் கூரையின் நாற்புறமும் உத்திரத்தின் மேல் வாஜனம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### அர்த்த மண்டபம்

மண்டபத்தின் மையத் தூண்களுக்கும், கருவறைகளுக்கும் இடையிலுள்ள பகுதியை அர்த்த மண்டபம் எனக் கொள்ளலாம்.

### கருவறைகள்

அர்த்த மண்டபத்தின் பின் சுவரில் மூன்று கருவறைகள் குடையப்பட்டுள்ளன. அவற்றின் வாயில்களுக்கு இடைப்பட்ட பகுதியில் பாதபந்த தாங்குதளம் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின் முன் சுவரில் அரைத் தூண்களும், ஆழமற்ற கோட்டங்களும் காட்டப்பட்டுள்ளன. அரைத் தூண்களின் உச்சியில் காணப்படும் போதிகைகள் அளவில் சிறிய உத்திரத்துடன் இணைகின்றன. உத்திரத்தின் மேல் வாஜனமும், வலபியும் காட்டப்பட்டுள்ளது. இவற்றின் மேல் நன்கு வடிவமைக்கப்பட்ட வளைவான கபோதம் அமைக்கப்பட்டுள்ளது.

மூன்று கருவறைகளுக்கும் தரையிலிருந்து கருவறையை அடைய படிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கருவறை வாயிலிலும் இருபுறமும் இரண்டு காவலர்கள் தமது சேவையில் நிற்கின்றனர். இம்மூன்று கருவறைகளிலும் மையக் கருவறையில் மட்டுமே சிறிய பாறையொன்றின் மேல் ஆவுடையாருடன் லிங்கம் காணப்படுகிறது. தெற்கு மற்றும் வடக்கு கருவறைகள் வெறுமையாகவே காட்சியளிக்கின்றன.

## குடைவரை எண் : 3

குன்றின் அடிவாரத்திலிருந்து குடைவரையைச் சென்றடைய படிகள் அமைக்கப்பட்டுள்ளன. குடைவரையின் அமைப்பு உயர்ந்த குன்று அல்லது மலையின் சரிவு தரைப் பகுதியைத் தொடும் இடத்தில் குடைவரையை அகழ்வது வழக்கமாக காணப்படுவதாகும். பாறையின் ஒருபுறத்தில் மட்டுமே குடைவரை அகழப்படும். இதிலிருந்து மாறுபட்டு இக்குடைவரை கிழக்கு மற்றும் தெற்கு ஆகிய இரண்டு முகங்களிலும் குடையப்பட்டுள்ளது.





கிழக்கு முகத்தில் குடைவுப் பணி முடிவடைந்த நிலையில் தென்முகப்பணி முழுமையடையாமல் உள்ளது.

இக்குடைவரை அமைந்துள்ள குன்றின் உச்சிக்குச் செல்லும் படிக்கட்டுகள் முடிவடையும் இடத்தில் ஒரு கற்றளியும், அதன் தென்புறத்தே சிறிது மேலே மற்றொரு கற்றளியும் அமைந்துள்ளன. மலையுச்சியிலுள்ள கோயில் பாதபந்த தாங்குதளத்துடன் முக மண்டபமும், கருவறையும் கொண்டு கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலின் முன்னால் கொடித்தளம், பலித்தளம் மற்றும் நந்தி காணக் கிடைக்கின்றன. சம்புவராயர் கல்வெட்டொன்று இக்கோயிலை மாந்தீசுவரர் கோயிலென்று அழைக்கிறது. இக்கோயிலின் தென்புறத்தே தாழ்வான பகுதியிலுள்ள கற்றளி முகமண்டபம், அர்த்தமண்டபம், கருவறையுடன் பாதபந்த தாங்குதளத்துடன் கிழக்குப் பார்வையாய் அமைந்துள்ளது.

கிழக்கு நோக்கி அமைந்துள்ள இக்குடைவரை, முகப்பில் ஐந்து முழுத் தூண்களையும், முகப்பின் வட, தென் மூலைகளில் அரைத் தூண்களையும் கொண்டமைந்துள்ளது. வடபுறத்திலுள்ள அரைத்தூண் நான்முகமாகக் காட்டப்பட்டுள்ளது. இவ்வரைத் தூணையடுத்து அமைந்துள்ள முழுத்தூண் சதுரம், கட்டு, சதுரம் அமைப்பைக் கொண்டுள்ளது. இதனையடுத்து ஒரு முழுத்தூண் சதுரம், கட்டு, சதுரம் அமைப்புகள் முழுமையடையாத நிலையில் உள்ளது. இதனையடுத்து அமைந்துள்ள மூன்று முழுத்தூண்களுள் இரண்டு நன்கு முழுமை பெற்றும், மற்றொன்று சதுரம், கட்டு, சதுரம் அமைப்புகளின்றி நான்முகமாக விடப்பட்டுள்ளது. தென்புறத்திலுள்ள நான்முக அரைத்தூண் இக்குடைவரையின் கிழக்கு முகத்திற்கு தென் எல்லையாகவும், தெற்கு முகத்திற்கு கிழக்கு எல்லையாகவும் செதுக்கப்பட்டுள்ளது. முகப்புத்தூண்கள் உத்திரத்தைத் தாங்கி நிற்கின்றன. உத்திரத்தின் மேல் வாஜனம் வட மூலையில் தொடங்கி தென்புற இரண்டாவது தூண் வரை நீள்கின்றது.

## முகமண்டபம்

குடைவரையின் முகப்பிற்கும், முகப்பின் உட்புறத்தில் அமைந்துள்ள தூண் வரிசைக்கும் இடையே முகமண்டபம் காணப்படுகிறது. கூரையை ஒட்டி மண்டபத்தின் முழு நீளத்திற்கும் கிழக்கு மேற்காக வாஜனம் அமைந்துள்ளது. முகமண்டபத்தின் தரைப்பகுதி நன்றாக சமன் செய்யப்பட்டுள்ளது. முகமண்டபத்தின் தெற்கு, வடக்குச் சுவர்களில் குடையப்பட்டுள்ள கருவறைகள் கடவுள் உருவங்கள் ஏதுமின்றி வெறுமையாக உள்ளன. வடபுறக் கருவறை, முகமண்டப, அர்த்தமண்டப அரைத்தூண்களுக்கிடையே குடையப்பட்டுள்ளது. கருவறையின் முகப்பில் கபோதக வளைவு செதுக்கப்பட்டுள்ளது. வெறுமையான சுவர்கள்

கூரையுடன் காணப்படும் இக்கருவறையின் பின்சுவரையொட்டி கடவுள் சிலைக்கான குழியொன்று வெட்டப்பட்டுள்ளது.

தென்புறக்கருவறையின் முன் சந்திரக்கல் காணப்படுகிறது. கருவறையின் சுவர்ப் பகுதியை ஒட்டி கடவுள் சிலையினைப் பொருத்த ஏதுவாக குழி வெட்டப்பட்டுள்ளது. கபோதம் முழுமையான அமைப்பைப் பெறவில்லை.

## அர்த்த மண்டபம்

அர்த்தமண்டபம், கருவறைப் பகுதிக்கும், முகமண்டபத்தை அடுத்த வரிசைத் தூண் களுக்குமிடையே அமைந்துள்ளது. தூண்வரிசையின் மையப்பகுதியில் நான்கு முழுத்தூண் களும், பக்கவாட்டில் பக்கத்திற்கொன்றாக இரண்டு அரைத்தூண்களும் உள்ளன. அர்த்த மண்டபத்தின் தரைப்பகுதி செவ்வனே சமன் செய்யப்பட்டுள்ளது. அர்த்தமண்டபத்தின் பின் சுவரில் ஐந்து கருவறைகளும், பக்கச்சுவர்களில் இரண்டு கருவறைகளும் குடையப் பட்டுள்ளன. மையப் பகுதியிலுள்ள நான்கு தூண்களும் சதுரம், கட்டு, சதுரம் என்னும் அமைப்பில் உள்ளன. இத்தூண்களின் போதிகைகள் வளைந்து உயர்ந்து உத்திரம் தாங்கு கின்றன. உத்திரத்தின் மேல் கிழக்கு, மேற்காக வாஜனம் செல்கிறது.

## கருவறைகள்

அர்த்தமண்டபத்தின் வடசுவர்க் கருவறை வாயிலின் இருபக்கத்திலும் நிலைகள் காட்டப்பட்டுள்ளன. கருவறையின் கூரை சிறு உத்திரம் போன்று இழுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேல் கபோதக வளைவு வடிக்கப்பட்டுள்ளது. சுவர்களும், கூரையும் வெறுமையாக அமைந்திருக்கும் இக்கருவறையில் கடவுள் சிலையமைக்க ஏதுவாக ஆழமான குழி யொன்று வெட்டப்பட்டுள்ளது. தென்சுவர்க் கருவறையின் முன் ஒரு படி வெட்டப்பட்டுள்ளது.

பின்புறச்சுவர்க் கருவறைகள் பாதபந்த தாங்குதளம் கொண்டமைந்துள்ளன. கரு வறை வாயில்களுக்கு இடைப்பட்ட சுவரின் கீழ் மட்டும் இத்தாங்குதளம் வெட்டப்பட் டுள்ளது. உத்திரம் தெற்கு வடக்காக கருவறையின் முகப்புகளை அலங்கரித்துச் செல்கிறது. உத்திரத்தின் மேலே கபோதம் நன்கு வளைக்கப்பட்டு கீழிறக்கப்பட்டுள்ளது.

முதல் மற்றும் மூன்றாம் கருவறை வாயில்களின் முன்னால் சந்திரக்கல்லும், மேலே ஒரு படியும் அமைக்கப்பட்டுள்ளன. மற்ற மூன்று கருவறை வாயில்களுக்கும் சந்திரக்கல்லும், மேலே இரண்டு படிகளும் அமைக்கப்பட்டுள்ளன. படிக்கட்டுகளின் இருபுறங்களையும் அணைத்தவாறு யானையின் துதிக்கை போன்ற சுருட்டலுடன் சந்திரக்கல்லின் இருபுறமும் அமைந்துள்ளது. இக்கருவறைகள் ஐந்தும் உட்புறத்தில் வெறுமையாக காணப்படுகின்றன. கருவறைகளின் பின்சுவருக்கு அருகில் நீளமான குழியொன்று வெட்டப்பட்டுள்ளது.

இக்குடைவரையின் மேற்பரப்பு முழுவதும் சுதையெழுதி வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்க வேண்டும். காலப்போக்கில் அவை மறைந்து போனதால் ஆங்காங்கே அவற்றின் எச்சங்கள் குடைவரையில் உள்ளன.

## குடைவரை எண் : 4

(முற்றுப் பெறாத சிறிய குடைவரை)


குன்றுத் தொடரின் தெற்கு மூலையில் கிழக்குத் திசைப் பார்வையில் இக்குடை வரை குடையப் பெற்றுள்ளது. மிக எளிமையான கட்டடக்கூறுகளைக் கொண்ட இக்குடை வரையை அணுக ஏதுவாக படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குடைவரைப் பணிகள் தொடங்கி முழுமை பெறாமல் இடையிலேயே கைவிடப்பட்டுள்ளன.

இக்குடைவரையின் முகப்பில் இரண்டு முழுத்தூண்களும், தென், வடபுறங்களில் பக்கத்திற்கொன்றாக இரண்டு அரைத்தூண்களும் உள்ளன.

முழுத்தூண்களுள் முதல் தூணில் சதுரம், கட்டு, சதுரமெனப் பிரிக்கும் பணி நிறைவுறாமல் கைவிடப்பட்டுள்ளது. கீழ்ச்சதுரம் மேற்சதுரத்தைவிட அதிக உயரத்துடன் காணப்படுகிறது. இரண்டாவது முழுத்தூண், சதுரம், கட்டு, சதுரம் போன்ற எவ்வித அமைப்பும் துவங்கப் பெறாமல் எளிமையாக விடப்பட்டுள்ளது. குடைவரையின் பின்புறச் சுவரில் மூன்று கருவறைகள் அமைக்கும் பணி துவங்கப்பட்டு அது நிறைவுறாது கைவிடப் பட்டுள்ளது.

நரசமங்கலம் பெரிய குடைவரையின் மேற்பகுதியில் உள்ள கோயில்கள்





## கற்றளிகள்

மலையுச்சியிலுள்ள வடக்கு புறக்கோயில் தெற்கு பார்த்த பைரவர் கோயிலாகும். இக்கோயில் முகமண்டபம், அர்த்தமண்டபம், கருவறை என்ற கட்டுக்கோப்பில் கிழக்கில் வாயில் கொண்டு அமைந்துள்ளது. நான்கு பிற்காலத் தூண்களால் தாங்கப்பட்டும் முன் மண்டபத்தின் நடுவில் பலித்தளமொன்று உள்ளது. இதன் மீது கல்லாலான சிறுசிறு யானை வடிவங்கள் வடிக்கப்பட்டுள்ளன. கருவறையில் பைரவர் தெற்கு நோக்கி நின்ற கோலத்தில் சுடர் முடியும் நாய் ஊர்தியுமாகக் காட்சி தருகிறார். பாதபந்த தாங்குதளத்தோடு அமைந் துள்ள இக்கோயிலின் முன்மண்டபச் சுவரில் கல்வெட்டுத் துணுக்குகள் உள்ளன.

இரண்டாவதாக உள்ள கற்றளி சிவன் கோயில் ஆகும். இக்கோயில் பாதபந்த தாங்குதளத்தின் மீது எழுந்துள்ளது. இக்கோயிலின் தாங்குதளத்தில் சுந்தரபாண்டியனின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் ஊரொன்று விற்பனை செய்யப் பட்டதன் தொடர்பான செய்திகளைக் குறிப்பிடுகின்றன.

## இரண்டாவது கற்றளி

இக்கோயில், கருவறையும், முகமண்டபமும் கொண்டமையப் பெற்றுள்ளது. கரு வறையில் லிங்கம் அமைந்துள்ளது. இக்கோயிலுக்கு முன்னால் நந்தி, பலித்தளம், கொடித் தளம் ஆகியவை அமைந்துள்ளன. இக்கோயிலைத் தற்போது அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜலகண்டேஸ்வர் கோயில் என்று குறிப்பிட்டு அழைக்கின்றனர்.

## தூசி மாமண்டூர் ஏரி

திருவண்ணாமலை மாவட்டத்தின் மிகப்பெரிய ஏரி. வெம்பாக்கம் வட்டத்தில் தூசி கிராமத்திற்கும் மாமண்டூர் கிராமத்திற்கும் இடையே உள்ள குன்றுகளுடன் சேர்ந்து **3.5 கி.மீ.** நீள கரையைக் கொண்டது. இந்த ஏரி மகேந்திரவர்ம பல்லவன் காலத்தில் வெட்டப்பட்டி




ருக்கலாம் என்றும் இவ்வேரிக்கு சித்திரமேகத் தடாகம் என்று பெயர் வழங்கப்பட்டதையும் மாமண்டூர் குடைவரைக் கோயிலில் உள்ள 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பராந்தக சோழன் கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது.

மகேந்திரவர்ம பல்லவன் காலத்திற்குப் பின்னர் சுமார் 10 நூற்றாண்டுகளுக்குப் பிறகு விஜயநகர பேரரசு காலத்தில் வந்தவாசியை தலைமை இடமாகக் கொண்டு ஆட்சி செய்து வந்த தாமல் வெங்கடப்ப நாயக்கர் என்பவர் ஏரியின் கரையை பலப்படுத்தி மேம்பாடு செய்து இவ்வேரிக்கு 'சென்னசாகரம்' என்று பெயரிட்ட செய்தி அவ்வேரியின் கரையில் உள்ள பொ.ஆ. 1638–ஐச் சேர்ந்த தமிழ், தெலுங்கு, சமஸ்கிருத மும்மொழிக் கல்வெட்டுகள் மூலம் தெரிய வருகிறது. இது அவரது தந்தை சென்னப்ப நாயக்கர் நினைவாக இட்ட பெயர் ஆகும். ஓராண்டுக்குப்பின் (பொ.ஆ. 1639) தாமல் வெங்கடப்ப நாயக்கர் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கு 'கூவம்' ஆற்றுக்கு வடக்கே கடற்கரையில் இடம் கொடுத்து 'சென்னப் பட்டணம்' உருவாகக் காரணமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமைப்பு

மாமண்டூர் ஏரி சுமார் 13 ச.கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. ஏரி முழு கொள்ளளவைக் கொண்டிருக்கும் போது கடல்போலக் காட்சியளிக்கிறது. இதன் நடுப்பகுதியின் ஆழம் 30 அடி, இதன் நீர் கொள்ளளவு 50.93 மி.கனமீட்டர். ஒரு முறை நீர் நிரம்பினால் 8 மாதத்திற்கு பாசன வசதி அளிக்கும்.

இவ்வேரியின் தனி நீர்ப்பிடிப்புப் பகுதி 30 ச.கி.மீ. கூட்டு நீர்ப்பிடிப்புப் பகுதி 297 ச.கி.மீ. இந்த நீர்ப்பிடிப்புப் பகுதியில் இருந்து மட்டும் ஏரிக்கு மழைக்காலத்தில் குறிப்பாக வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் நீர் நிரம்பியதும் பாசனம் செய்யப்படுகிறது. பாலாறு நீர் பாசனத் திட்டத்தில் (1896) இருந்து இரண்டு கால்வாய்களில் ராஜாக்கால் கால்வாய் மூலம் தூசி மாமண்டூர் ஏரிக்கு 20.38 க.மீ. நீர் வருகிறது. சக்கரமல்லூர் கால்வாயிலிருந்து வெங்களத் தூர் ஏரி நிரம்பி அதன் வழியாக மீண்டும் ராஜாக்கால் கால்வாயில் கலந்து ஏரிக்கு நீர் வரு கிறது. அணைக்கட்டிலிருந்து பிரியும் மற்றொரு கால்வாயான தென்னம்பட்டு கால்வாய் பல தொடர் ஏரிகளுக்கு நீர் அளித்து பின் இறுதியாக ஒழுகவாக்கம் ஏரியில் கலக்கிறது. ஒழுகவாக்கம் ஏரியின் மிகுதி மீண்டும் ராஜாக்கால் கால்வாயில் கலக்கிறது.



இவ்வேரியில் தூசியில் ஒன்றும் மாமண்டூரில் ஒன்றும் ஆக இரண்டு மதகுகளும் வலப்புறம் இடப்புறம் என சற்று மேட்டுப் பகுதியில் இரண்டு மதகுகளும் ஆக 4 மதகுகள் உள்ளன. ஏரியின் மிகுதி நீர் வெளியேற இரண்டு கலிங்குகள் உள்ளன. இந்த ஏரியின் ஆயக்கட்டுப் பகுதி 4118 ஏக்கர், இதன் மூலம் 18 கிராமங்கள் பாசன வசதி பெறுகின்றன.

## கல்வெட்டுகள்

### அமைவிடம்

மாமண்டூர் நரசமங்கலம் குடைவரையின் வலதுபுற குன்றின் பாறை முகப்பில் தமிழிக் கல்வெட்டு ஒன்றும், முதல் குடைவரையில் தெற்குப் புறத்தில் கல்வெட்டு ஒன்றும், இரண்டாம் குடைவரையில் தெற்கு மற்றும் வடக்குப் புறங்களில் தலா ஒரு கல்வெட்டும், மலை மீது உள்ள சிவன் கோவிலில் ஆறு கல்வெட்டுகளும், மாமண்டூர் ஏரிக்கரையில் நான்கு கல்வெட்டுகளும், திருமனந்தீஸ்வரர் கோவிலில் ஒரு கல்வெட்டும், தூசி லட்சுமி நரசிம்மர் கோவிலில் ஒரு கல்வெட்டும், தூசி வைகுந்த பெருமாள் கோவிலில் ஐந்து கல்வெட்டுகளும் ஆக மொத்தம் 21 கல்வெட்டுகள் உள்ளன.

### காலம்

இங்கு கிடைக்கப்பெறும் கல்வெட்டுகளில் காலத்தால் முந்தையதான தமிழிக் கல் வெட்டு கி.பி. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். முதல் குடைவரையில் உள்ள கல்வெட்டு 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். 2ஆம் குடைவரையில் உள்ள கல்வெட்டு சோழர் காலத்தைச் சேர்ந்ததாகும். மலைமீதுள்ள கல்வெட்டு 12, 13ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந் தவைகளாகும். லட்சுமி நரசிம்ம கோயில் கல்வெட்டு 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

### ஆட்சியாளர்கள்

இவ்வூரில் கிடைக்கப்பெறும் கல்வெட்டுகளிலிருந்து இப்பகுதியின் ஆட்சியாளர் களைப் பற்றி அறியலாம். தமிழிக் கல்வெட்டு 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. ஆனால் எந்த மன்னர் பெயரும் இடம்பெறவில்லை. இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் கணிமான் என்பவர் ஒர் இனக் குழுத் தலைவனாக இருக்கலாம். முதல் குடைவரையின் கல்வெட்டு பல்லவ கிரந்தத்தில் வெட்டப்பட்டுள்ளது. இதில் மகேந்திரவர்மனின் பட்டப்பெயர்கள் குறிப்பிட்டுள் ளதால் அவரது ஆட்சிப் பகுதியாக மாமண்டூர் இருந்துள்ளது. இரண்டாம் குடைவரையின் வலதுபுறக் கல்வெட்டு இராஜராஜன் காலத்தியதாகவும் இடதுபுறம் உள்ளது பராந்தகன் காலத்தியதாகவும் கருதப்படுகிறது. மலைமீது உள்ள கல்வெட்டுகளில் சம்புவராயர்கள் காலத்தியதும், மதுரை பாண்டியர்கள் காலத்தியதும் உள்ளன. ஊரில் உள்ள லட்சுமி நரசிம்ம கோயில் 19ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த கல்வெட்டு, ஆக இப்பகுதி சங்க காலத்தில் இருந்து தற்போது வரையான காலத்தைச் சேர்ந்த ஆட்சியாளர்களின் கீழ் இருந்து வந்துள்ளது என அறியலாம்.


குறிப்புதவி நூல்கள்

1. மகேந்திரர் குடைவரைகள், மு. நளினி, இரா. கலைக்கோவன், சேகர் பதிப்பகம்.
2. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 22.
3. http://sarasvatam.in/ta/2015/12/19/Kjyh«-knAª¤u-gšytå/
4. http://puratattva.in/2010/11/11/mamandur-cave-temple-worshop-27


நூலாக்க உதவி : டாக்டர். இராஜேந்திரன், திருவண்ணாமலை. சந்திரசேகரனின் முகநூல் பதிவு




# தூசி பாலிடெக்னிக் கல்லூரி

## Special Features

- தொடர்ந்து 13 ஆண்டுகளாக மாநிலத்தில் முதலிடம்
- 100% தேர்ச்சி
- 100% வேலைக்கு அமர்த்தல்
- CAMPUS INTERVIEW



## Courses

- DCE - சிவில்
- DME - மெக்கானிக்கல்
- DAME - ஆட்டோ மொபைல்
- DEEE - எலக்ட்ரிகல் & எலக்ட்ரானிக்ஸ்
- DECE - எலக்ட்ரானிக்ஸ் & கம்யூனிகேஷன்

அன்பின் அடையாளம்,
அமைதியின் உச்சம்,
ஆர்ப்பாரிப்பு இல்லா
ஒரே தலைவர்

டாக்டர். **K.R. ஆறுமுகம்** B.E., F.I.E., D.LITT., M.A. (Yoga)
நிறுவனர், தூசி பாலிடெக்னிக் கல்லூரி, தூசி

பஸ் வசதி, CNC பயிற்சி, டிஜிட்டல் நூலகம், இன்டர்நெட், கணிப்பொறி கூடம், நவீன ஆய்வகங்கள், விளையாட்டுத் திடல், திறமையான நிர்வாகம், அனுபவம் வாய்ந்த முதல்வர் மற்றும் விரிவுரையாளர்கள்

தூசி, வெம்பாக்கம் தாலுக்கா,
திருவண்ணாமலை மாவட்டம் - 631 702.

Printed @ Subam // Tvmalai